TNMD150000102015

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை திரு.பொ.மகாராஜன்.எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

2026ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண்.149/2015

திருமதி. கே. சித்ரா. ...வாதி.

/எதிர்/

1, திருமதி. வள்ளிமயில் (*இறப்பு).

2. திரு. சந்துரு.

** 3. மதுபாலா .

** 4. மலை ஈஸ்வரன்.

*** 5. மனோஜ்குமார்.

6. திருமதி. சித்ராயி.

7. திருமதி. தனம்.

8. திருமதி. ராஜேஸ்வரி. ...பிரதிவாதிகள்.

*Amended as per order in I.A.No. 1943/2018 dated on 06.12.2018.

**Amendede as per order in I.ANo.2/2023 dated on 01.11.2023.

***Amended as per order in I.A.No. 7/2025 dated on 09.09.2025.

இவ்வழக்கு 16.07.2026ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. ராஜா அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், 2ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 3 முதல் 5 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் ஆஜராக நாளிதழில் விளம்பரம் செய்தும் ஆஜராகாததால், 3 முதல் 5ம் பிரதிவாதிகளுக்கெதிராக

ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 6 முதல் 8ம் பிரதிவாதிகளை நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாததால், அவர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பில் ஒருதலைபட்ச சாட்சி விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

2 முதல் 8 பிரதிவாதிகள், வாதிக்கு சமூக நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் மொத்த தொகை ரூ.99,500/-த்தையும், அசல் தொகை ரூ.75,000/-த்திற்கு பிராது தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 12% வட்டியையும், தீர்ப்பாணைக்கு பின்பு தொகை செல்லாகும் வரை அசல் தொகைக்கு 6% வட்டியையும் சேர்த்து வாதிக்கு 2 முதல் 8 பிரதிவாதிகள் செலுத்த கோரியும், செலவுத் தொகை கோரியும், 2 முதல் 8 பிரதிவாதிகள் தீர்ப்பு தொகையை வாதியிடம் செலுத்த தவறும் பட்சத்தில் முதல் நிலை தீர்ப்பாணையின் பேரில் வாதியை இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு செய்து கொள்ள அனுமதி வழங்க கோரியும் மற்றும் இதர பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-

1.1. தாவா வழக்கிடைச் சொத்து பிரதிவாதிகளுக்கும், இறந்து போன பாண்டித்துரையின் தகப்பனார் (லேட்) முனியாண்டிக்கும், (லேட்) பாண்டித்துரைக்கும் மற்றும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுக் குடும்பச் சொத்தாகும்.

1.2 மேற்படி பாண்டித்துரை சென்ற 06.05.2012 அன்று 1 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து போய்விட்டார். பாண்டித்துரை இறப்பதற்கு முன்பே அவருடைய தகப்பனார் முனியாண்டி, அவருடைய மனைவியான 6-ம் பிரதிவாதியும் மற்றும் அவருடைய பெண் மக்களான 7, 8 பிரதிவாதிகளையும் மற்றும் அவருடைய மகனான பாண்டித்துரை என்பவரையும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார்.

1.3 (லேட்) பாண்டித்துரையும், பிரதிவாதிகளும் ஒரு இந்து பொதுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பொதுக்குடும்பத்தின் மூத்த ஆண் நபராகிய பாண்டித்துரை பொதுக்குடும்ப சொத்துக்களையும், பொதுக் குடும்பத்தையும் நிர்வாகம் செய்து வந்தார்.

1.4. பாண்டித்துரை உயிருடன் இருக்கும் காலத்தில், அவர் தனக்காகவும், பொதுக்குடும்ப மேனேஜர் ஸ்தானத்திலும், பொதுக்குடும்ப அத்தியாவசிய மற்றும் அவசிய செலவுகளுக்காக வாதியிடமிருந்து 10.10.2011ம் தேதியில் ரூ.75,000/– த்தை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/– க்கு 1 வீதம் வட்டி கூட்டி கூடிய வட்டியையும், அசலையும் சேர்த்து ஒரு வருட காலத்தவணைக்குள் வாதியிடம் செலுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு, அதற்கு செக்யூரிட்டியாக வாதி பெயருக்கு மேற்படி பாண்டித்துரை தனக்காகவும், பொதுக்குடும்ப மேனேஜர் ஸ்தானத்திலும் தாவா வழக்கிடைச் சொத்தை ஈடு பாத்தியப்படுத்தி வாதிக்கு தாவா ஈடு பத்திரத்தை எழுதிப் பதிந்து கொடுத்தார்.

1.5. (லேட்) பாண்டித்துரை உயிருடன் இருக்கும் பொழுது அவரோ, அவர் இறந்த பிற்பாடு பிரதிவாதிகளோ, தாவா ஈடுகடன் தஸ்தாவேஜிற்கு இன்றைய தேதிவரையில் அசலுக்காவது அல்லது வட்டிக்காவது வாதியிடம் யாதொரு தொகையும் செலுத்தவில்லை. அதை செலுத்தும்படி (லேட்) பாண்டித்துரை இருக்கும் வரை அவரிடமும், அவர் இறந்த பின்னால் பிரதிவாதிகளிடமும் வாதி பல தடவைகள் துயர்ந்தும், நாளது தேதி வரை செலுத்தாமல் காலம் கடத்தி வந்தார்கள். அதன் பின்பு தாவா ஈடு பத்திரத்தின் பேரில் வரவேண்டிய அசல் மற்றும் வட்டி பூராவையும் சேர்த்து செலுத்தும்படி வாதியால் 1ம் பிரதிவாதிக்கு ரிஜிஸ்டர் தபால் மூலமாகவும், மற்ற பிரதிவாதிகளுக்கு சாதாரண தபால் மூலமாகவும் 20.01.2015 தேதியில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. மேற்படி ரிஜிஸ்டர் நோட்டீஸை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட பின்பும் யாதொரு பதிலும் கொடுக்காமல், தாவா ஈடுகடன் தஸ்தாவேஜிக்கு வாதியிடம் அசலுக்காவது, வட்டிக்காவது யாதொரு தொகையும் செலுத்தவில்லை.

1.6. பிரதிவாதிகளுக்கு கடன் நிவாரண சட்டங்கள்படி யாதொரு பலன்களும் கிடைக்கதக்கதில்லை. தாவா ஈடுகடன் பத்திரத்தின் அசல் தொகைக்கு பிராது தேதியில் 12% வீதம் வட்டியும், அதற்கு பின்பு தீர்ப்பாணை தேதி வரை அசல் தொகைக்கு 12% வீதமும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை செல்லாகும் வரை அசல் தொகைக்கு 6%வட்டி வீதமும் கோரப்பட்டுள்ளது வாதி தனக்கு தேவையில்லை

என்று வட்டியில் ரூ. 8,500/– ஐ விட்டுக் கொடுத்துவிட்டார். தாவா வழக்கு நிலுவையில் உள்ள பொழுது 2 முதல் 5 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு 1–ம் பிரதிவாதி இறந்துவிட்டார். தாவா பிராதில் கண்ட மொத்தத் தொகை ரூ.99,500/– க்கும் பின் வட்டிக்கும், செலவு தொகைக்கும் ஈட்டு சொத்தின் பேரில் முதல் நிலை டிகிரி பிறப்புவிக்க வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:–

வழக்குரையில் எழுத்துபூர்வமாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவைகள் மறுக்கப்படுகிறது, அவைகளை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவராவார். வாதி வட்டிக்கு கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருகிறார். வாதி பாண்டித்துரையிடம் கடன் கொடுத்ததாக சொல்லப்படுவது இந்த பிரதிவாதிகளுக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதியின் கணவர் பாண்டித்துரை தான்தோன்றிதனமாகவும், குடும்ப நலனுக்கு எதிராக திரிந்து வந்துள்ளார். 1ம் பிரதிவாதிதான் தன் குழந்தைகளையும், குடும்பத்தையும் கூலி வேலை செய்து பராமரித்து வந்துள்ளார். மேற்படி 10.10.2011ம் தேதி தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஈடுகடன் பத்திரத்தை பற்றி இப்பிரதிவாதிகளுக்கு தெரியாது. தாவா சொத்தான வீட்டில்தான் இந்த மைனர்களான பிரதிவாதிகள் வசித்து வருகிறார்கள், இப்பிரதிவாதிகளுக்கு வேறு வீடு கிடையாது. பிரதிவாதிகளின் தகப்பனார் குடும்பத்தை பராமரிக்க எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்பதால், பிரதிவாதிகளிடமிருந்து கடனை வசூல் செய்ய வாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது, எனவே வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3.சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்

இவ்வழக்கில் வாதி வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் வாதியான திருமதி. சித்ரா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பிரதிவாதிகள் தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை. எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

4. 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2ம் பிரதிவாதி தரப்பில் திரு. A.T. சேகர் அவர்கள் ஆஜராகி போதிய வாய்ப்பு வழங்கப்பட்ட பின்பும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 2ம் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 3 முதல் 5ம் இளவர் பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர்/நீதிமன்ற காப்பாளரான திரு. S. நயினான் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8ம் பிரதிவாதிகளை நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

<u>05. எழுவினாக்கள்</u>

1)Whether the mortgage deed dated 10.10.2011 is true and valid?

2)Whether the plaintiff is entitled to the relief of Preliminary decree as prayed for?

3) To What other reliefs the plaintiff is entitled for?

6. மேற்படி அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் இருந்தநிலையில், 20.02.2020ல் நீதிமன்ற காப்பாளார் தாக்கல் செய்த குறிப்பாணையின் பேரில் இளவர்கள் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் மேஜராகிவிட்டதால் நீதிமன்ற காப்பாளர் நீக்கப்பட்டுள்ளார். மேலும், இடைக்கால மனு எண்.4/2024 மனுவிற்கு 11.03.2025 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி இளவர் 5ம் பிரதிவாதி மேஜராகிவிட்டதால், நீதிமன்ற காப்பாளர் நீக்கப்பட்டுள்ளார்.

7. இந்நிலையில் 3 முதல் 5 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் ஆஜராக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். எனவே வாதி தரப்பில் வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8. எழுவினா1 மற்றும் 2க்கான தீர்வு

1)Whether the mortgage deed dated 10.10.2011 is true and valid?

2)Whether the plaintiff is entitled to the relief of Preliminary decree as prayed for?

8.1) வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா சொத்தான பொது கூட்டுக் குடும்ப சொத்தை பொறுத்து பாண்டிதுரை என்பவர் வாதியிடம் ரூ.75,000/- பெற்று 10.10.2011ம் தேதி பதிவு செய்யப்பட்ட அடமான ஆவண எண்.6180/2011ன்படி எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், ஒரு வருட காலத்தில் அடமான தொகையை செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் பாண்டித்துரை என்பவர் அடமான ஆவணத்தின்படி அடமான தொகையை செலுத்தவில்லை என்றும், இந்நிலையில் பாண்டித்துரை 06.05.2012ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், எனவே பாண்டிதுரை வாதிக்கு செலுத்த வேண்டிய அடமான தொகையை செலுத்த 1 முதல் 8 பிரதிவாதிகள் கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், அடமான தொகை கேட்டு வாதி தரப்பில் 24.01.2015 தேதியிட்டு அறிவிப்பானது 1 முதல 8 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அதற்கு பின் அடமான தொகை செலுத்தாததால் வாதி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

8.2) வாதி தரப்பில், வாதியான திருமதி. சித்ரா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் 10.10.2011 தேதியிட்ட வாதிக்கு பாண்டித்துரை தனக்காகவும், பொதுகுடும்ப நிர்வாகி என்ற பொறுப்பிலிருந்தும் ரூ.75,000/-க்கு எழுதிக் கொடுத்த ஒரு வருட ஈடுகடன் ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1ஆகவும், 29.01.2015ம் தேதி வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அஞ்சலக நகல் வா.சா.ஆ.2ஆகவும், 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.3) வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"இதனடியில் கண்டதும் எனக்கு பூர்வீக பாத்தியமானதும் நான் வீட்டு வரி செலுத்தி அனுபவித்து வருகிற RCC வீட்டை தங்களுக்கு ஈடாக வைத்து என் குடும்ப அபிவிருத்தி செலவுக்காகவும் தங்களிடம் நான் நேரில் ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூ.75,000/- இத்ந ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் என் பற்றாகிவிட்டபடியால் இதற்கு லாபமாக மாதம் 1 (ஒன்று)க்கு ரூ.100/- (நூறு)க்கு வட்டி ரூ.1.00 (ஒன்று) வீதம் செலுத்தி வந்து 1 (ஒரு) வருடம் தவணை முடிந்தவுடன் அசல் தொகையை மட்டும் செலுத்தி சொத்தை மீட்டு கொள்வேனாகவும் எந்த மாதத்திலாவது வட்டி செலுத்த தவறினால் தவறிய மாதத்திற்கு வட்டிக்கு வட்டி சேர்த்து கூடும் தொகைக்கு ஈடு சொத்தின் பேரில் பிரவேசித்து தொகை வசூல் செய்து கொள்வீர்களாகவும்.*

*இதற்கு முன் நான் வேறு யாருக்கும் எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தவில்லை என்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.."*

வா.சா.ஆ.2 ஆவணமான வாதி தரப்பில் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு 24.01.2015ம் தேதியில் அனுப்பப்பட்ட அறிவிப்பு என்பதும், வா.சா.ஆ.3 ஆவணமானது 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை என்பதும் தெரியவருகிறது.

8.4) வழக்குரையில் தாவா சொத்து பிரதிவாதிகளுக்கும் இறந்துபோன பாண்டிதுரையின் தகப்பனார் லேட் முனியாண்டி, லேட் பாண்டித்துரை ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பொது கூட்டு குடும்ப சொத்தாகும் என்றும், பொது கூட்டு குடும்ப தேவைக்காக பாண்டிதுரை வாதியிடம் அடமான ஆவணம் எழுதிக் கொடுத்து பணம் வாங்கியுள்ளார் என்றும், அந்த பணத்தை திரும்ப செலுத்தாததால் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.5) இறந்துபோன முனியாண்டி என்பவரின் மனைவி 6 பிரதிவாதி என்பதும், இறந்துபோன முனியாண்டி என்பவரின் மகள்கள் 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் என்பதும் வழக்குரையின்படி தெரியவருகிறது.

8.6) வாதி தரப்பில் பொது கூட்டு குடும்ப தேவைக்காக பாண்டிதுரை வாதியிடம் அடமான ஆவணம் எழுதிக் கொடுத்து பணம் வாங்கியுள்ளார் என்று வாதிடப்படுகிறது. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட அடமான ஆவணத்தில் "என் குடும்ப அபிவிருத்தி செலவுக்காக" என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, பொது கூட்டு குடும்ப தேவைக்காக பணம் வாங்கியதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை.

8.7) வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக் கொடுத்த பாண்டித்துரை என்பவர் இறந்துவிட்டார் என்ற நிலையில், அவரது வாரிசுதாரர்களுக்கு எதிராக மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய இயலும். இந்த வழக்கில் இறந்துபோன பாண்டித்துரை என்பவரது வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும், வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விபரங்களின்படி, 1ம் பிரதிவாதி பாண்டித்துரையின் மனைவி என்பதும், 2 முதல் 5 பிரதிவாதிகள் பாண்டித்துரையின் பிள்ளைகள் என்பதும், 6ம் பிரதிவாதி பாண்டித்துரையின் தாயார் என்பதும், 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் பாண்டித்துரையின் சகோதரிகள் என்பதும் தெரியவருகிறது.

8.8) பாண்டித்துரை என்பவர் வா.சா.ஆ.1 அடமான ஆவணத்தை எழுதிக் கொடுத்து வாதியிடம் பணம் பெற்றுள்ளார் என்று தெரியவரும் நிலையில், மேற்படி பணம் செலுத்தப்பட்டுவிட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. அடமான பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் பாண்டித்துரை இறந்துவிட்ட நிலையில், அவரது வாரிசுதாரர்கள் மட்டுமே பாண்டித்துரை வாங்கிய கடனை செலுத்த கடமைப்பட்டவர்களாவர்.

8.9) வழக்குரையின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இறந்துபோன பாண்டித்துரை மனைவியான 1ம் பிரதிவாதி மற்றும் பிள்ளைகளான 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும், தாயாரான 6ம் பிரதிவாதி ஆகியோர்கள் மட்டும் இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி இறந்துபோன பாண்டிதுரையின் வாரிசுகளாக கருதப்படுவார்கள். பாண்டிதுரை என்பவரின் சகோதரிகளான 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் பாண்டித்துரையின் வாரிசுதாரர்களாக கருதப்படமாட்டார்கள்.

8.10) மேலே கண்டவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இறந்துபோன பாண்டிதுரை என்பவர் எழுதிக் கொடுத்துள்ள வா.சா.ஆ.1 அடமான ஆவணம் உண்மையானது மற்றும் சட்டப்படி செல்லக்கூடியது என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில், வாதியிடம் பெற்ற ரூ.75,000/– கடன் தொகையை அவரது வாரிசுகளான 2 முதல் 6 பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. 7 மற்றும் 8 பிரதிவாதிகளை பொறுத்து இறந்துபோன பாண்டிதுரை என்பவர் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.1 அடமான ஆவணத்திற்கு பொறுப்பாகமாட்டார்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எழுவினா 1ஐ பொறுத்து வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது. எழுவினா 2ஐ பொறுத்து பகுதியாக வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

<u>09. எழுவினா 3ற்கான தீர்வு</u> :

3) To What other reliefs the plaintiff is entitled for?

எழுவினாக்கள் 1 மற்றும் 2 ஆகியவற்றைப் பொறுத்து வாதிக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளபடியால் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று எழுவினா 3–யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

1. வா.சா.ஆ.1 ஆவணமான 10.10.2011 தேதிய பதிவு செய்யப்பட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் இறந்துபோன பாண்டித்துரை செலுத்த வேண்டிய அசல் தொகை ரூ.75,000/–ஐ வழக்கு தாக்கல் செய்த நாள் வரை வட்டியை சேர்த்து மொத்த தொகை ரூ.1,08,000/–ல் வாதியால் விட்டுக் கொடுக்கப்பட்ட தொகை ரூ.8,500/–ஐ கழித்து மீதத் தொகை ரூ.99,500/–ஐ இறந்துபோன பாண்டித்துரையின் வாரிசுகளான 2 முதல் 6 பிரதிவாதிகள் வாதிக்குச் செலுத்த வேண்டுமெனவும், மேற்கண்ட அசல் தொகையான ரூ.75,000/–த்திற்கு, வழக்கு தொடரப்பட்ட நாள் முதல், தீர்ப்புரை பகரப்பட்ட நாள் வரை, ஆண்டுக்கு 12% வட்டியும், அதன்பின்னர் தீர்ப்புரை பகரப்பட்ட நாள் முதல் தொகை வசூலாகும் நாள் வரை அசல் தொகை ரூ.75,000/–க்கு ஆண்டுக்கு 6% வட்டியும்,

வழக்குச் செலவு தொகையும் சேர்த்து 2 முதல் 6 வரையுள்ள பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் எனவும் இதன் மூலம் விளம்பப்படுகிறது.

2. எனவே, 2 முதல் 6 பிரதிவாதிகள், இத்தீர்ப்புரையின்படி வாதிக்கு செலுத்த வேண்டிய தொகை, வட்டி மற்றும் வழக்குச் செலவுகள் ஆகியவற்றை தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

3. 2 முதல் 6 வரையுள்ள பிரதிவாதிகள் மேற்கண்ட காலத்திற்குள் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தத் தவறினால், வாதி அடமானச் சொத்தை விற்பனை செய்வதற்கான இறுதிநிலை தீர்ப்பாணையை (Final Decree for Sale) கோரி இந்நீதிமன்றத்தை அணுகுவதற்கு உரிமையுடையவர். அதன்படி, தாவா அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள அடமானச் சொத்து, சட்டப்படி விற்பனை செய்யப்பட்டு, அதன்மூலம் இத்தீர்ப்பாணையின்படி வாதிக்கு செலுத்த வேண்டிய தொகை வசூலிக்கப்படலாம்.

4. 2 முதல் 6 வரையுள்ள பிரதிவாதிகள் இத்தீர்ப்பாணையின்படி செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் செலுத்தியிருந்தால், அடமானத்தை மீட்பதற்கும், பொருந்தும் பட்சத்தில் அடமானம் தொடர்பான மூல ஆவணத்தை 2 முதல் 6ம் பிரதிவாதிகளிடம் ஒப்படைப்பதற்கும் சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. 7 மற்றும் 8ம் பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM
Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.08.14 18:07:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

TNMD150000102015

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

1.வா.சா.1 – திருமதி. கே. சித்ரா.

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

| வாதி தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.10.2011 | ஈடுகடன் ஆவணம் | அசல். |
| வா.சா.ஆ.2 | 29.01.2015 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல். |
| வா.சா.ஆ.3 | --- | 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல ஒப்புகை அட்டை | அசல். |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : இல்லை.</u>

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.</u>

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.08.14 18:07:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.